# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி எண்: 044–22201337.
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண். 165/ந/2024 , நாள்: 09.04.2025**

திரு.வே.கணபதி பாலசுப்பிரமணியன்,
கடையநல்லூர், தென்காசி மாவட்டம் —— முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
கடையநல்லூர் நகரராட்சி,
தென்காசி மாவட்டம் —— எதிர் மனுதாரர்

தென்காசி மாவட்டம், கடையநல்லூர், மேலக்கடையநல்லூர், பவுண்டுக் கீழத்தெரு, கதவு எண்.3 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. வே.கணபதி பாலசுப்பிரமணியன் என்பவரின் 26.07.2024 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 30.07.2024 அன்று பெறப்பட்டு, 165/ந/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

தென்காசி மாவட்டம், கடையநல்லூர், மேலக்கடையநல்லூர், பவுண்டுக் கீழத்தெரு, கதவு எண்.3 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. வே.கணபதி பாலசுப்பிரமணியன் என்பவர் தனது 26.07.2024 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

"தமிழகத்தில் தற்போது நகராட்சி போன்ற உள்ளாட்சி அமைப்புகளில் மக்களுக்கு விரைவான மற்றும் நிறைவான சேவை வழங்க ஒப்பந்தக்காரர்கள் மூலம் அவுட்சோர்சிங் என்றழைக்கப்படும் வெளிகொணர்வு முகமை மூலம் குடிநீர் விநியோகம் உட்பட பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அவுட்சோர்சிங் சேவைகளை மேற்கொள்வதற்கு ஒப்பந்தக்காரர்களுக்கு விரிவான விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் வழங்குதல், சேவை வழங்குவதற்காக ஒப்பந்ததாரர்களால் நியமிக்கப்பட்ட ஊழியர்களின் நலன் போன்றவற்றை

ஒழுங்குபடுத்துவதற்காக பல்வேறு விதிகளை மத்திய, மாநில அரசுகள் வகுத்துள்ளன. ஆனால் கடையநல்லூர் நகராட்சியில் அவுட்சோர்சிங் மூலம் பணி செய்யும் ஒப்பந்தப்பணியாளர்கள் எவ்வித பணி பாதுகாப்பு மற்றும் சலுகைகள் இன்றி கொத்தடிமைகளாக நடத்தப்படுகிறார்கள். இது குறித்து தங்களது மேலான கவனத்திற்கு கீழ்க்கண்ட தகவல்களை சமர்ப்பிக்கின்றேன்.

கடையநல்லூர் நகராட்சி ஒரு இலட்சத்திற்கும் அதிகமான ஜனத்தொகை கொண்ட பெரிய நகராட்சியாகும். இந்நகராட்சியில் 20 ஆயிரத்திற்கும் அதிகமான குடிநீர் இணைப்புகள் உள்ளன. குடிநீர் விநியோகம் மற்றும் பராமரிப்பு பணிகள் அவுட்சோர்சிங் என்னும் வெளிக்கொணர்வு முறையில் மேற்கொள்ளப்படுகிறது. குடிநீர் விநியோகம் மக்களுக்கு மிகவும் அத்தியாவசிய பணி என்பதால் பணியாளர்கள் இரவும், பகலும், கோடையிலும், குளிரிலும் நேரம், காலம் பாராது பணி செய்கின்றனர். ஆனால் அவர்கள் எவ்வித பணி பாதுகாப்புமின்றி, இன்சூரன்ஸ், இ.பி.எப்., போனஸ் போன்ற எவ்வித சலுகைகளுமின்றி பணி செய்து வருகின்றனர்.

இது குறித்து நான் தகவல் அறியும் உரிமைச்சட்டம் மூலம் பெற்ற தகவல்களை இத்துடன் இணைத்துள்ளேன். அதில் ஒப்பந்த பணியாளர்களுக்கு ஒப்பந்ததாரரால் ஊதியம் வழங்கிய விவரம் பதிவுகள் இல்லை என பொறுப்பற்ற முறையில் தகவல் தந்துள்ளனர். (நகல் இணைக்கப்பட்டுள்ளது). ஆனால் இப்பணிகளுக்கு ஈ.பி.எப்., ஈ.எஸ்.ஐ., போன்ற சலுகைகளை சேர்த்து தான் மதிப்பீடு தயார் செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர் அறிவுறுத்தியுள்ளார். (நகல் இணைக்கப்பட்டுள்ளது). அத்துடன் நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை, தனது 02.03.2022 தேதியிட்ட சுற்றறிக்கையில் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்படும் ஒவ்வொரு பட்டியலுக்கான தொகையும், ஒப்பந்ததாரர்கள் தன்னுடைய பணியாளர்களுக்கு சேமநலநிதி (EPF) உரிய கணக்கில் செலுத்தி அதற்கான உரிய ரசீது வழங்கப்பட்டதை உறுதி செய்தபின் வழங்க வேண்டும். தவறும் பட்சத்தில் ஒப்பந்ததாரர் EPF தொகை செலுத்தாமல் ஏற்படும் அனைத்து வழக்குகள் மற்றும் இழப்பீட்டிற்கும் நகராட்சி ஆணையர்களே பொறுப்பாக்கப்படுவர் என்று தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. (நகல் இணைக்கப்பட்டுள்ளது). ஆனால் இவற்றையெல்லாம் கடையநல்லூர் நகராட்சி நிர்வாகம் கண்டு கொள்ளவில்லை.

எனவே கடையநல்லூர் நகராட்சி அலுவலகத்தில் குடிநீர் விநியோகம் மற்றும் பராமரிப்பு பணியாளர்கள், நீர்தேக்க தொட்டி பராமரித்தல் பணியாளர்கள், பொறியியல் மற்றும் பொது சுகாதாரப்பிரிவு வாகனங்களுக்கு ஓட்டுனர் பணியாளர்கள் போன்ற அவுட்சோர்சிங் முறையில் பணி செய்யும் பணியாளர்களுக்கு பி.எப். இ.எஸ்.ஐ. இன்சூரன்ஸ், போனஸ் போன்ற சலுகைகளை வழங்காமல் கொத்தடிமைகளாக நடத்திய ஒப்பந்தக்காரர்கள் மீதும் அதற்கு துணை போன அதிகாரிகள் மீதும் நடவடிக்கைக்கு உத்தரவிடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரரது புகார் குறித்து கடையநல்லூர் நகராட்சி ஆணையரிடம் இம்முறைமன்ற நடுவ 30.09.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் விரிவான அறிக்கை கோரப்பட்டது.

3. எதிர்மனுதாரரான கடையநல்லூர் நகராட்சி ஆணையர் தனது 05.11.2024 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்ட விவரங்களை தெரிவித்துள்ளார்.

"மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ளபடி, இந்நகராட்சிப் பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு தேவையான குடிநீர் பெரியாற்று படுகை மற்றும் கல்லாற்றில் உள்ள கிணறுகள் மூலம் பெறப்பட்டு

தலைமை பணியிட தரைமட்ட நீர்த்தேக்க தொட்டி மற்றும் 13 எண்ணிக்கையிலான மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மூலம் சேகரிக்கப்பட்டு பகிர்மான குழாய்கள் வழியாக பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி குடிநீர் விநியோகம் செய்யும் பணிகளான குடிநீர் வால்வு அடைப்பு, திறப்பு மற்றும் மோட்டார்கள், ஜென்செட், வால்வு பிட் சுத்தம் செய்யும் பணிகளுக்கு இந்நகராட்சி குடிநீர் பிரிவில் போதுமான பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் தனியார் ஒப்பந்த அடிப்படையில் ஒப்பந்த பணியாளர்கள் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்படி குடிநீர் பணியில் ஈடுபடும் ஒப்பந்த பணியாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் அனைத்தும் வழங்கப்படுவதோடு வாரம் ஒருமுறை சுழற்சி முறையில் விடுமுறை அளிக்கப்பட்டு வருகிறது. தற்போது தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டின் அடிப்படையில் குடிநீர் ஒப்பந்த பணியாளர்களுக்கு தொழிலாளர் நல நிதி வழங்கப்பட்டு வருகிறது. இனி வரும் காலங்களில் மேற்படி பணியாளர்களுக்கு பி.எப். இ.எஸ்.ஐ. மற்றும் இன்சூரன்ஸ் போன்ற சலுகைகளும் சேர்த்து மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு நடைமுறைக்கு கொண்டு வரப்படும் என்ற விவரம் மாண்பமை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரை 20.01.2025 அன்று நடைபெற உள்ள விசாரணையில் ஆஜராகும்படி இம்முறைமன்ற நடுவ 06.01.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 20.01.2025 அன்றைய நேரடி விசாரணையில் இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"கடையநல்லூர் நகராட்சியில் அவுட்சோர்சிங் முறையில் குடிநீர் விநியோகப்பணி நடைபெற்று வருகிறது. இந்த பணியாளர்களுக்கு அரசு விதிமுறைகளின்படி இன்சூரன்ஸ், இபிஎப், போன்ற எவ்வித அரசு சலுகைகளும் வழங்கப்படுவதில்லை. நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களது அறிவுரைப்படி கடந்த 2021–ம் ஆண்டு ரூபாய் 129.06 லட்சம் மதிப்பீட்டில் 49 பணியாளர்களை பணியமர்த்த (இபிஎப், இஎஸ்ஐ உட்பட) நகர்மன்ற கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் அதன் பின்பும் இபிஎப், இஎஸ்ஐ போன்றவை பிடித்தம் செய்யப்படாமல் சம்பளம் வழங்கப்படுகிறது. 02.03.2022 தேதியிட்ட நகராட்சி நிர்வாக ஆணையர் சுற்றறிக்கையில் ஒப்பந்தப்பணியாளர்களுக்கு சேமநலநிதி(இபிஎப்) உரிய கணக்கில் செலுத்தி அதற்கான ரசீது பெறப்பட்டதை உறுதிப்படுத்தப்பட்ட பின்புதான் ஒப்பந்ததாரர்களுக்கு பட்டியல்தொகை வழங்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. அனால் இந்த நடைமுறை கடைபிடிக்கப்படவில்லை. அத்துடன் பாதிக்கப்பட்டவர்கள் தொழிலாளர் நலத்துறையை அணுகியும் அதற்கும் நகராட்சியில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. தொழிலாளர்களின் கோரிக்கைகளை அலட்சியப்படுத்தியுள்ளனர்.

எனவே கடையநல்லூர் நகராட்சியில் ஒப்பந்த முறையில் பணியாற்றும் ஒப்பந்த பணியாளர்கள் அனைவருக்கும் இபிஎப். இஎஸ்ஐ, போன்ற சலுகைகளை வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களை இதன் மூலம் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரரான கடையநல்லூர் நகராட்சி ஆணையர் 20.01.2025 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்ட தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

“கடையநல்லூர் நகராட்சியில் குடிநீர் பிரிவில் போதுமான பணியாளர்கள் இல்லாத காரணத்தால் ஏற்கனவே தனியார் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்கள் நியமிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்படி பணியாளர்களுக்கு உரிய பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகிறது. வாரம் ஒரு முறை சுழற்சி அடிப்படையில் விடுமுறை அளிக்கப்பட்டு வருகிறது. தொழிலாளர் நலநிதி வழங்கப்பட்டு வருகிறது.

இனி வரும் காலங்களில் ஒப்பந்த பணியாளர்களுக்கு மனுதாரர் தெரிவித்துள்ளதுபோல், விதிகளுக்குட்பட்டு பி.எப். இஎஸ்ஐ, மற்றும் இன்சூரன்ஸ் போன்றவைகள் வழங்க மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு நடைமுறையில் கொண்டு வரப்படும் என்பதனை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

7) மனுதாரரின் புகார் மனு, மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள் மற்றும் மனுதாரர் வாக்குமூலம், எதிர்மனுதாரரான கடையநல்லூர் நகராட்சி ஆணையரின் அறிக்கை, மற்றும் அவரது வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

மனுதாரர் தனது புகார் மனு மற்றும் வாக்குமூலத்தில், கடையநல்லூர் நகராட்சியில் அவுட்சோர்சிங் சேவைகளை மேற்கொள்வதற்கு தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் வழங்குதல், பணி செய்யும் தொழிலாளர்களுக்கு பணி பாதுகாப்பு மற்றும் சலுகைகள், இன்சூரன்ஸ், இ.பி.எப். போனஸ் போன்ற எவ்வித சலுகைகளுமின்றி பணி செய்து வருகின்றனர் என்றும் மேற்படி சலுகைகளை வழங்காமல் கொத்தடிமைகளாக நடத்திய ஒப்பந்தக்காரர்கள் மீதும் அதற்கு துணை போன அதிகாரிகள் மீதும் நடவடிக்கைக்கு உத்தரவிடுமாறு இம்முறைமன்ற நடுவத்தை கோரியுள்ளார்.

குடிநீர் பணியில் ஈடுபடும் ஒப்பந்த பணியாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்படுவதோடு வாரம் ஒரு முறை சுழற்சி முறையில் விடுமுறை அளிக்கப்பட்டு வருகிறது எனவும், குடிநீர் ஒப்பந்த பணியாளர்களுக்கு தொழிலாளர் நல நிதி வழங்கப்பட்டு வருகிறது என்றும், இனி வரும் காலங்களில் மேற்படி பணியாளர்களுக்கு பி.எப். இன்சூரன்ஸ் மற்றும் இ.எஸ்.ஐ போன்ற சலுகைகளும் சேர்த்து மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு நடைமுறைக்கு கொண்டு வரப்படும் என்பதும் கடையநல்லூர் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

எனவே இந்நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை **02.03.2022** நாளிட்ட சுற்றறிக்கையில், “ஒப்பந்ததாரருக்கு வழங்கப்படும் ஒவ்வொரு பட்டியலுக்கான தொகையும், ஒப்பந்ததாரர்கள் தன்னுடைய பணியாளர்களுக்கான வருங்கால வைப்பு நிதியை (EPF) உரிய பணியாளர்களின் கணக்கில் செலுத்தி அதற்குரிய ரசீது வழங்கப்பட்டதை உறுதி செய்தபின் ஒப்பந்தப்பட்டியலுக்கான தொகை வழங்கவேண்டும் என்றும் தவறும் பட்சத்தில் ஒப்பந்ததாரர் EPF தொகை செலுத்தாததால் ஏற்படும் அனைத்து வழக்குகள் மற்றும் இழப்பீட்டிற்கும் நகராட்சி/மாநகராட்சி ஆணையர்களே பொறுப்பாக்கப்படுவர்” என குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் இதுநாள்வரை கடையநல்லூர் நகராட்சியில் பணியாற்றும் ஒப்பந்த பணியாளர்களுக்கான E.P.F. மற்றும் E.S.I. செலுத்தப்படவில்லை என்பது கடையநல்லூர் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் வாக்குமூலத்திலிருந்து தெரிய வருகிறது.

இந்நேர்வில் ஒப்பந்த தொழிலாளர்களுக்கான E.P.F./E.S.I. செலுத்தப்பட்டதா என்பதை கண்காணிக்கத் தவறிய கடையநல்லூர் நகராட்சி ஆணையர் மீது துறை ரீதியாக நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரை செய்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2025 ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள் 09–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1)திரு.வே.கணபதி பாலசுப்பிரமணியன்,
எண்.3, பவுண்டுக் கீழத்தெரு,
மேலக்கடையநல்லூர்.
கடையநல்லூர் – 627 751.
தென்காசி மாவட்டம்.

2)நகராட்சி ஆணையர்,
கடையநல்லூர் நகராட்சி,
கடையநல்லூர்.
தென்காசி மாவட்டம்.

3)நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

4)ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

செயலாளர்